**மாகாண வீதிகள் செயற்திட்டம் - பகுதிகள் ஏ.3 மற்றும் பீ.3 (பிஆர்பி) - 2012**

**1. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துங்களுக்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதியிடல் நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்கள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 446,830,717 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 679,938,106 ஆகும். மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான செயற்திட்டச் செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012<br>ரூபா | 2011<br>ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 370,277,508 | 149,042,019 | 519,319,527 |
| பொறி மற்றும் உபகரணம் | 1,982,186 | 4,663,020 | 4,663,020 |
| ஆலோசனை | 61,546,564 | 64,539,192 | 126,085,756 |
| அதிகரிக்கும் மற்றும் செயற்பாட்டுக் கிரயம் | 13,024,459 | 15,845,344 | 29,869,803 |
| | 446,830,717 | 234,089,575 | 679,938,106 |

### 2.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட (டொலர்) கணக்கின் செயற்பாடுகள் மற்றும் அத்திகதியில் உள்ளவாறு அக்கணக்கில் உள்ள மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 3,043,458 | 346,653,803 |
| கூட்டு :- மீள் நிரப்பல்கள் | 3,787,000 | 483,764,256 |
| வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 48,900,891 |

| | | |
|---|---|---|
| | 6,830,458 | 879,318,950 |
| கழி :- பற்றுதல்கள் | 3,433,736 | 447,389,054 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 3,396,722 | 431,929,896 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 431,929,896 தொகையான விசேட (டொலர்) கணக்கின் மீதியை நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நடைமுறையல்லாப் பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது இடைநிறுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் உள்ளடங்கலாக ஒப்ந்தகாரர்களிற்கு செலுத்தப்பட்ட ரூபா 115.4 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் செயற்திட்டச் செலவினமாகக் கருதப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான நிதிமூலங்கள் மற்றும் பயன்பாட்டு கூற்றில் வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் புறம்பாக இனங்காணப்பட்டு காட்டப்பட்டிருக்கவில்லை.

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீ லங்கா ரெலிகொமிற்கு தூண்களை இடம்மாற்றுவதற்காக செலுத்தப்பட்ட ரூபா 50,408,094 தொகை ஒப்பந்தகாரர்களிற்கு நேரடியாகச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கொடுப்பனவுகள் மற்றும் வேலை மதிப்பீடுகளின் விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

உழைக்கும் போதே செலுத்தும் வரியை அனுப்புதல்

2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் XV ஆம் அத்தியாயத்தின்படி செயற்திட்டத்தின் இரண்டு உத்தியோகத்தர்களிடம்

அவர்களுடைய சம்பளங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 3.4 ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்ட படிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைப்புப் படியாக பிரதம செயலாளர், உட்கட்டமைப்பு அமைச்சு செயலாளர், பிரதி பிரதம செயலாளர்- நிதி மற்றும் மாகாணக் கணக்காய்வு மணிப்பாளர் என்போருக்கு ரூபா 849,453 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆ) கொடுப்பனவுகள் உரிய அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

இ) செயற்திட்ட வேலைகளை ஒருங்கிணைப்பதற்காக படிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் நெறிப்படுத்தல் குழுக் கூட்டங்களிற்கான வருகைப் பதிவேடுகளைத் தவிர்த்து செய்யப்பட்ட வேலையின் தன்மை மற்றும் விபரங்கள், உத்தியோகத்தர்கள் செயற்திட்டம் தொடர்புபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்ட நாட்களின் எண்ணிக்கை போன்றவாறான வேலை ஒருங்கிணைப்புக்கான சான்றுகள் கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை.

ஈ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் XV ஆம் அத்தியாயத்தின்படி மாதம் ஒன்றிற்கு ரூபா 50,000 ஐ விஞ்சிய ஒருங்கிணைப்பு படியை செலுத்திய உத்தியோகத்தர்கள் சம்பளங்களாக படியிலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 கட்டுநிதி நிதிகளின் பயன்பாடு

(அ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது கட்டு நிதியாக ரூபா 830,418,059 தொகை பெறப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட செலவினம் ரூபா 446,830,717 மாத்திரமாக இருந்தது. மேலும், 2013 மார்ச் 31 வரை செயற்திட்டத்தால் அவற்றின் மீது எவ்வித பற்றுதல்களும் செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, 2012 திசெம்பர 31 இல் உள்ளவாறான

ரூபா 431,929,896 தொகையான விசேட (டொலர்) கணக்கு மீதி செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படாமல் பயனற்றிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரசாங்கத்தின் வருடாந்த மதிப்பீடுகளில் தலைப்பு இல- 315- உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சு, நிகழ்ச்சித்திட்டம்- 02 - அபிவிருத்தி நடவடிக்கைகள், செயற்திட்டம்- 021 விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் கீழ் ரூபா 457,730,000 ஆன நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது. மீளாய்வாண்டின் போதான தேறிய நிதியேற்பாடு ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் என்பன கீழே தரப்படுகின்றன.

| | **நிதியேற்பாடு** | **செலவினம்** | **நிதிப் பயன்பாட்டின் சதவீதம்** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| எவ்ஏ | 429,730,000 | 428,501,878 | 99 |
| ஆர்எவ்ஏ | 23,000,000 | 16,071,881 | 70 |
| ஜீஓஎஸ்எல் | 5,000,000 | 2,256,958 | 45 |
| | 457,730,000 | 446,830,717 | |

## 4.2. ஒப்பந்த நிர்வாகம்

### 4.2.1 (அ) வீதி செயற்திட்டங்களின் பிஆர்பி/என்பி/03 மற்றும் பிஆர்பி/என்பி/05 ஆம் இலக்க இரண்டு பொதிகளை முடிவுறுத்தல்

(I) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தங்கள் பின்வரும் பணிகளின் செயலாற்றல் இன்மை காரணமாக மீளாய்வாண்டின் போது இடைநிறுத்தப்பட்டிருந்தன.

- வேண்டப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதில் குறைபாடு
- வேலைத்தளத்தில் அதிகாரமளிக்கப்படாத மற்றும் அங்கீகரிக்கப்படாத இருப்புக்களை குவித்தல்
- வேலைத்தளத்தில் மலசலகூடம் நிறுவப்படாமை
- வேலைத்தளத்தில் தேவைப்பட்ட பிரதான ஆளணியினை முழுமையாக நகர்த்தாமை.

- வடிவமைப்பு/ படம்வரைதலை பூர்த்தியாக்காமை
- பொருட்கள் வழங்குநர்களிற்காக தொடர்புபட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்காமை
- செயற்திட்டம் தொடர்புபட்ட நடவடிக்கைகளிற்காக தொழில் ஆரம்பிப்பு முற்பணங்களை பயன்படுத்தியமைக்கான ஆவணச்சான்றுகள் வழங்கத் தவறியமை

(II) முடிவுறுத்தப்படும் சமயத்தில் மேற்கூறிய ஒப்பந்தங்களின் வீதிகளின் ஒட்டு மொத்த செயன்முன்னேற்றம் பின்வருமாறு இருந்தது.

| **வீதிகள்** | **இலக்கின் சதவீம்** | **அடைந்து கொள்ளல் சதவீதம்** |
|---|---|---|
| சீ 15 | 92.29 | 1.48 |
| சீ 17 | 68.98 | 0.48 |
| சீ 14 | 18.72 | 0.16 |

(III) ஆலோசகரின் மேற்பார்வை போதாமை மற்றும் நெருங்கிய கண்காணிப்பு நடைமுறை இன்மை காரணமாக வீதி ஒப்பந்த வேலைகளின் இடைநிறுத்தம் உருவாகியது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 4.2.2 ஒப்பந்த வேலைகள் மீதான மேற்பார்வை

2012 திசெம்பர் 31 வரை மேற்பார்வை ஆலோசகருக்காக ரூபா 61,546,563 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i) மேற்பார்வை ஆலோசனையாளரால் ஒப்பந்தங்கள் நலிவான முகாமை செய்யப்பட்டதன் விளைவாக, மீளாய்வாண்டின் போது 26.4 கிமீ நீளமான வீதி வேலைகளிற்கான இரண்டு ஒப்பந்த பொதிகள் இடைநிறுந்தப்பட்டன. 29.3 கிலோ மீற்றர் நீளமான எஞ்சிய இரண்டு பொதிகளின் செயன்முன்னேற்றம் இலக்குகளை விட அதிக தொலைவில் காணப்பட்டது.

ii) ஆலோசனை பதவியினர்களின் இயலுமை போதாதிருந்ததுடன் செயற்றிறனற்ற ஒப்பந்த நிர்வாகம், தொடர்பாடல் மற்றும் வடிவமைப்பின காரணமாக குழுத்தலைவருக்குப் பதிலாக மற்றுமொருவர் நியமிக்கப்பட்டார்.

iii) ஒப்பந்த வேலைகளின் கண்காணிப்பு போதாமை

iv) முரணான கட்டளைகள், கால நீடிப்பு, திருத்திய வடிவமைப்பு மற்றும் வழமையான வேலைகள் என்பன குறிப்பிடத்தக்க அளவில் தாமதமடைந்திருந்தன.

v) ஆலோசனையாளர் மற்றும் அவருடைய உத்தியோகத்தரில் தொழில்சார் அர்ப்பணிப்பு இன்மை.

### 4.2.3 மின்சார கம்பங்களை இடமாற்றல்

இலங்கை மின்சார சபை (சீஈபீ) கம்பங்களை இடம்மாற்றுவாற்காக செய்யப்பட்ட ரூபா 39.2 மில்லியன் தொகையான கொடுப்பனவுகள் 2012 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்டிருந்தன, ஆனால் இடம் மாற்றும் வேலைகள் 2012 ஆம் ஆண்டில் இறுதியில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. விபரம் கீழே தரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் | பிரிவு | சீஈபீ மதிப்பீட்டினை அங்கீகரித்த திகதி | செய்யப்பட்ட கொடுப்பனவுகள் | 2012.12.31 இல் உள்ளவாறான செயன் முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| என்பி 01 | சீ 006 | 2012.04.23 | 2012.07.20 | இல்லை |
| | சீ 007 | 2012.06.14 | 2012.09.20 | 71 % |
| | சீ 012 | 2012.06.14 | 2012.07.31 | 29 % |
| என்பி 02 | 143-16ஏ | 2012.06.02 | 2012.08.06 | 40 % |

### 4.2.4 பாரிய மிகையான அளவீடுகள்

தயாரிக்கப்பட்ட முறையற்ற மதிப்பீடுகள் காரணமாக திருத்தப்பட்ட அளவுகளை விட பாரிய மிகை அளவுகள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | ஒப்பந்த இல ஜஆர்பி/என்பி/01 | | | | ஒப்பந்த இல ஜஆர்பி/என்பி/02 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பீஓகியூ அளவு கன மீற்றர் | திருத்திய அளவு கன மீற்றர் | கூட்டிய அளவு கன மீற்றர் | அதிகரிப்பின் சதவீதம் அளவு | பீஓகியூ அளவு கன மீற்றர் | திருத்திய அளவு கன மீற்றர் | கூட்டிய அளவு கன மீற்றர் | அதிகரிப்பின் சதவீதம் அளவு |
| துப்பரவாக்கல் மற்றும் தோண்டுதல் | 22,862 | 51,196 | 28,334 | 124 | 55,719 | 62,822 | 7,103 | 13 |
| உப தளம் | 3,276 | 4,398 | 1,122 | 24 | - | - | - | - |
| ஏபீசீ | 16,099 | 17,816 | 1,717 | 11 | - | - | - | - |
| ஆணை கட்டுதல் | 1,540 | 7,807 | 6,267 | 407 | 3,630 | 10,950 | 7,320 | 200 |
| காவிச் செல்லல் | 3,007 | 3,758 | 751 | 25 | 4,810 | 5,504 | 694 | 14 |

### 4.2.5 கால நீடிப்பிற்கான அங்கீகாரம்

ஒப்பந்தங்களை பூர்த்தி செய்வதற்கான கால நீடிப்பு வழங்குவதறகான சிபார்சுகள் செயற்திட்ட முகாமைத்துவ அறிக்கையின் மதிப்பீட்டின் அடிப்படையில் முறையே 123 பஞ்சாங்க நாட்கள் மற்றும் 70 பஞ்சாங்க நாட்கள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், ஒப்பந்தகரார்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட கால நீடிப்பிற்காக தகுந்த காரணங்கள் அல்லது அடிப்படைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வழங்கப்பட்ட கால நீடிப்பின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தம் பூர்த்தியாக்கலின் ஆரம்ப திகதி | நீடிப்பு 1 | நீடிப்பு 2 | நீடிப்பு 3 |
|---|---|---|---|---|
| என்பி/ 01 | 2012.01.27 | 2012.07.17 | 2013.05.05 | 2013.08.31 |
| என்பி/02 | 2011.11.29 | 2012.05.15 | 2012.07.06 | 2013.0520. |

### 4.2.6 ஒப்பந்த பெறுமதிகளில் திருத்தம்

கடனளிக்கும் முகவர் மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் ஒப்பந்த பெறுமதியிலும் பிஓகியூ விடயங்களிலும் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) ஒப்பந்த பெறுமதிகள் திருத்தப்பட்டிருந்த போதிலும் திருத்தத்திற்கான காரணம் மற்றும் ஒப்பந்த பெறுமதி திருத்தத்திற்கான கடனளிக்கும்

முகவரிடமிருந்து பெறப்பட்ட அங்கீகராம் என்பன பற்றிய சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

| ஒப்பந்த இலக்கம் | ஆரம்ப பெறுமதி | திருத்தியது | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா. |
| என்பி/ 01 | 458,115,063 | 470,693,157 | 12,578,094 |
| என்பி/02 | 427,502,519 | 426,894,391 | (608,128) |

(ஆ) ஒப்பந்தங்களின் பிகியூகியூ விடயங்களின் திருத்தம்

பின்வரும் பிஓகியூ விடயங்கள் 10 % இற்கு மேல் திருத்தப்பட்டிருந்த போதிலும் உரிய அதிகாரிகளின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | ஆரம்பம் | திருத்தப்பட்டது | அதிகரிபட்ட சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| 01. **பொதி என்பி/01** | | | |
| I. வீதி இல. R441JF C006 | | | |
| 1. இடம் துப்பரவுசெய்தல் | 464,645 | 753,119 | 62 |
| 2. மண் வேலை | 4,018,500 | 5,722,050 | 42 |
| II. வீதி இல. R441JF C007 | | | |
| 1 இடம் துப்பரவுசெய்தல் | 624,136 | 803,765 | 29 |
| 2 மண் வேலை | 5,084,350 | 12,270,000 | 141 |
| 3. வீதி முன்னேபாடு | 66,621,375 | 88,302,610 | 33 |
| III. வீதி இல. R441JF C012 | | | |
| 1. இடம் துப்பரவுசெய்தல் | 259,300 | 644,504 | 149 |
| 2. மதகு அமைத்தல் கட்டமைப்பு மற்றும் பஸ் தரிப்பிடம் | 1,364,600 | 1,675,600 | 23 |
| 02. **பொதி என்பி/02** | | | |
| I. வீதி இல. C142 | | | |
| 1 இடம் துப்பரவுசெய்தல் | 254,324 | 347,659 | 37 |
| 2 மண் வேலை | 2,849,999 | 4,170,470 | 46 |
| II. வீதி இல. C 143 | | | |
| 1 இடம் துப்பரவுசெய்தல் | 287,424 | 332,867 | 16 |
| 2 மண் வேலை | 5,830,180 | 14,869,540 | 155 |

| | | | |
|---|---|---|---|
| 3 மதகு அமைத்தல் கட்டமைப்பு மற்றும் பஸ் தரிப்பிடம் | 469,193 | 624,439 | 133 |
| III. வீதி இல. C 143 | | | |
| 1.மண் வேலை | 10,365,856 | 23,592,926 | 128 |
| IV. வீதி இல. JF - 137 | | | |
| 1.மண் வேலை | 5,293,490 | 13,100,769 | 147 |

## 4.3 செயன்முன்னேற்ற மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண வீதிச் செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 மே 23 இல் தொடங்கியிருந்தது. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சால் வட மாகாணத்தின் மாகாண வீதி செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு ஆலோசனைக் கம்பனியொன்று இன்னொரு உள்ளூர் ஆலோசனையாளருடன் இணைத்து செயற்திட்ட அமுலாக்கல் ஆலோசனையாளராக நியமிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏழு பொதிகள் கொண்ட 100 கிலோ மீற்றர் வீதியை புனரமைப்பது ஆரம்ப பிரேரணையாக இருந்ததுடன் பின்னர் இது நிதிப் பற்றாக்குறை காரணமாக 4 பொதிகளைக் கொண்ட 55 கிலோ மீற்றருக்கு குறைக்கப்பட்டது. 4 பொதிகளில் இரண்டு பொதிகளின் ஒப்பந்தங்கள் கீழே தரப்பட்ட விபரங்களின்படி திட்டமிட்டதற்கு எதிராக குறைவான முன்னேற்றம் காரணமாக 2012 நவம்பர் 23 இல் முடிவுறுத்தப்பட்டன.

| முடிவுறுத்தப்பட்ட ஒப்பந்தம் | கிலோ மீற்றரின் எண்ணிக்கை | நிதிசார் செயன்முன்னேற்றம் | | பௌதீக செயன் முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | திட்டமிட்டது | அடைந்தது | திட்டமிட்டது | அடைந்தது |
| பீஆர்பி/என்பி/03 | 14.0 | 83% | 21% | 76% | 5.23 |
| பீஆர்பி/என்பி /05 | 12.4 | 87% | 16% | 74% | 0.75 |
| | **26.4** | | | | |

மேற்குறிப்பிட்ட ஒப்பந்தங்கள் 2012 நவம்பர் 23 இல் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் புதிய ஒப்பந்தகாரர்களுக்கு வழங்குவதன் மூலம் 26.4 கிமீ மிகுதி வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் செய்யப்பட்டிருக்கவில்லை என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதியான இரண்டு பொதிகளின் பௌதீக மற்றும் நிதிசார் செயன்முன்னேற்றங்கள் குறைவான செயலாற்றலைக் காட்டியிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றது.

| பொதி இலக்கம் | திருதத்திய ஒப்பந்த பெறுமதி. | 2012.12.31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | | 2012.12.31 இல் உள்ளவாறான நிதி முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | அடைந்தது | இலக்கு | அடைந்தது |
| | ரூபா | | | | |
| பீஆர்பி /01 | 470,693,157 | 95% | 50% | 92% | 51% |
| பீஆர்பி /02 | 426,894,391 | 73% | 52% | 80% | 43% |

2012 ஆம் ஆண்டு இறுதியில் செயற்திட்டக் காலத்தின் 50 % முடிவடைந்திருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட இரண்டு பொதிகளிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 885 மில்லியன் தொகையில் ரூபா 425 மில்லியன் செலவினம் மாத்திரமே ஏற்பட்டிருந்தது.

### 4.4. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) இரண்டு வாகனங்களை வாடகைக்கமர்த்துவதற்கு 2012 திசெம்பர் 31 வரை வாகன வாடகைக் கட்டணங்களாக ரூபா 6,863,310 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், கிலோமீற்றர் ஒன்றிற்கு அண்ணளவாக ரூபா 100 கட்டணம் கொழும்பிலுள்ள தனியார் கார் வாடகைக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், யாழ்ப்பாணத்தில் வாடகைக் கட்டணங்கள் கிலோமீற்றர் ஒன்றிற்கு ரூபா 40 ஆக இருந்தது. இதன் விளைவாக, கொடுக்கல் வாங்கலின் சிக்கனத்தை கருத்திற்கொள்ளாமல் வாடகைக் கட்டணங்களாக குறிப்பிடத்தக்களவு தொகை செலுத்தப்பட்டிருந்தது.

ஆ) மாகாண சபைக்கு மாதாந்தம் ரூபா 80,000 சம்பளத்தில் சட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் முடிவுறுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் சட்ட ஆவணங்களை தயாரிப்பதற்கு சட்டச் செலவினமாக ரூபா 135,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவரிடமிருந்து எவ்வித சட்டச் சேவைகளும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், கொள்வனவுக் குழு ரூபா 125,000 ஆன சட்டச் செலவினம் மாத்திரம் அங்கீகரித்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

இ) 2012 திசெம்பர் 31 வரை கட்டிட வாடகையாக ரூபா 1,050,000 ஆன தொகை செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும்,

மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம மதிப்பீட்டாளரிடமிருந்து மாதம் ஒன்றிற்கு ரூபா 50,000 கட்டிட வாடகைக்கான மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு மற்றும் கண்கேடுகளின் பேணுகை

(ஆ) முற்பணங்கள் மற்றும் கட்டுநிதி

(இ) ஒப்பந்த நிர்வாகம்